SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING**

**SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF COMMERCE (EXTERNAL) – 2011/2012**

HELD IN JUNE / JULY 2013

# BCOM - 21 ADVANCED FINANCIAL ACCOUNTING

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

கணிப்பான் உபயோகிக்கமுடியும்.

**01.**(அ). வாடகை கொள்வனவு என்றால் என்ன?

(02 புள்ளிகள்)

(ஆ).“காசுவிலை” “வாடகை கொள்வனவு விலை” “முற் கொடுப்பனவு” (down payment) என்பனவற்றை வரையறுக்குக.

(06 புள்ளிகள்)

(இ). “பொருட்களை மீளெடுத்துக்கொள்ளல்” (goods repossessed) என்ற பதத்தினை விளக்குக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**02.** அசோக் நிறுவனத்தினதும் அதன் உப கம்பனி லேலன்ட் நிறுவனத்தினதும் 31.03.2012 இல் உள்ளபடியான ஐந்தொகைகள் பின்வருமாறு.

| | அசோக் நிறுவனம் (ரூபா. 000) | | லேலன்ட் நிறுவனம் (ரூபா. 000) | |
|---|---|---|---|---|
| ஆதனம் இயந்திரம் உபகரணம் | | 2,500 | | 2,000 |
| லேலன்ட் நிறுவனத்தின்100,000 பங்குகளில் முதலீடு | | 1,500 | | |
| | | 4,000 | | 2,000 |
| நடைமுறைசொத்துக்கள்: | | | | |
| இருப்பு | 150 | | 400 | |
| கடன்பட்டோர் | 1,000 | | 800 | |
| வங்கியிலுள்ள காசு | 100 | | 50 | |
| | 1,250 | | 1,250 | |
| நடைமுறை பொறுப்புக்கள்: | | | | |
| கடன் கொடுத்தோர் | 900 | | 350 | |
| நிலுவையாக உள்ள செலவுகள் | ---- | 350 | 250 | 650 |
| தேறியசொத்துக்கள் | | **4,350** | | **2,650** |

| | | | | |
|---|---|---|---|---|
| முலீடும் ஒதுக்கங்களும் | | | | |
| 10 ரூபாவான சாதாரணபங்குள் | | 2,250 | | 1,250 |
| பொது ஒதுக்கம் | | 600 | | 250 |
| வருமான ஒதுக்கம் | | 1,500 | | 1,150 |
| | | **4,350** | | **2,650** |

மேலதிகதகவல்கள்:

1. அசோக் நிறுவனம் லேலன்ட் நிறுவனத்தின் 10 ரூபாவான 100000 சாதாரணபங்குகளை 01 ஏப்ரல் 2009 இல் கொள்வனவு செய்தது. இத்திகதியில் லேலன்ட் நிறுவனத்தின் வருமான ஒதுக்க மீதி ரூபா. 300000 ஆகும்.
2. 01 ஏப்ரல் 2009 க்குப் பிறகு லேலனட் நிறுவனத்தின் மூலதன, பொது ஒதுக்க மீதிகளில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.
3. அசோக் நிறுவனத்தின் கடன் பட்டோர் தொகையானது லேலனட் நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா. 25,000 ஐ உள்ளடக்குகின்றது.
4. அசோக் நிறுவனம் லேலனட் நிறுவனத்திற்க்கு கிரயத்தில் 12.5% இலாபம் வைத்து ரூபா. 45,000 பெறுமதியான பொருட்களை பட்டியலிட்டுள்ளது. இப்பொருட்கள் லேலன்ட் நிறுவனத்தின் 31.03.2012 இல் உள்ள இருப்பினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அசோக் நிறவனத்தினதும் அதன் உப கம்பனி லேலென்ட் நிறுவனத்தினதும் 31.03.2102 இல் உள்ளபடியான திரண்ட ஐந்தொகையினை தயாரிக்குமாறு வேண்டப்படுகிறீர்.

(25 புள்ளிகள்)

**03**. அ. கிளை என்ற பதத்தினை வரையறை செய்க..

(02 புள்ளிகள்)

ஆ. இலங்கையில் கிளையினைக் கொண்டுள்ள இரண்டு கம்பனிகளின் பெயர்களைத் தருக.

(01 புள்ளிகள்)

இ. கீழ்வருவன XY நிறுவனத்தினதும் அதன் காலியிலுள்ள கிளையினதும் பரீட்சை மீதியாகும். XY நிறுவனத்தினதும் அதன் கிளையினதும் 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிரல் வடிவிலான வியாபார, இலாப நட்டக்கணக்கையும், அத்திகதியில் உள்ளபடியான திரட்டிய ஐந்தொகையினையும் தயாரிக்குக.

**31.12.2012 இல் பரீட்சை மீதி**

| விபரம் | த.அ வரவு (ரூபா.) | கிளை வரவு (ரூபா.) | த.அ செலவு (ரூபா.) | கிளை செலவு (ரூபா.) |
|---|---|---|---|---|
| உற்பத்திச் செலவு | 30,000 | 10,000 | | |
| சம்பளம் | 30,000 | 10,000 | | |
| கூலி | 100,000 | 40,000 | | |
| கையிலுள்ள காசு | 10,000 | 2,000 | | |
| கொள்வனவு | 150,000 | 80,000 | | |
| மூலதனம் | - | - | 200,000 | - |
| தலைமை அலுவலகத்திலிடமிருந்து பெற்ற பொருட்கள் | - | 15,000 | - | - |
| வாடகை | 8,000 | 4,000 | - | - |
| பொது செலவுகள் | 20,000 | 5,000 | - | - |
| விற்பனை | - | - | 450,000 | 150,000 |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | - | - | 15,000 | - |
| ஆரம்ப இருப்பு | 50,000 | 30,000 | - | - |
| கொள்வனவு திரும்பல் | - | - | 5,000 | 1,000 |
| கழிவுகள் | - | - | 2,000 | 1,000 |
| இயந்திரம் கிரயத்தில் (த.அ) | 150,000 | - | - | - |
| இயந்திரம் கிரயத்தில் (கிளை) | 50,000 | - | - | - |
| தளபாடம் கிரயத்தில் (த.அ) | 7,000 | - | - | - |
| தளபாடம் கிரயத்தில் (கிளை) | 3,000 | - | - | - |
| கடன் பட்டோர் | 40,000 | 15,000 | - | - |
| கடன் கொடுத்தோர் | - | - | 30,000 | 5,000 |
| தலைமை அலுவலக கணக்கு | - | - | - | 54,000 |
| கிளைக் கணக்கு | 54,000 | - | - | - |
| மொத்தம் | **702,000** | **211,000** | **702,000** | **211,000** |

தலைமை அலுவலகத்தில் இறுதியிருப்பு ரூபா. 40,000 மும், கிளையில் இறுதியிருப்பு ரூபா.

30,000 மும் காணப்பட்டன. தேய்வானது இயந்திரத்தின் மீது 20% மும், தளபாடத்தின் மீது 15% மும் மேற்கொள்ளப்பட வேண்டும். கிளையில் நிலுவையாக காணப்படும் வாடகை ரூபா. 500 ஆகும்.

(22 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**04.** பெனான்டோ நிறுவனத்தின் 31. மாரச் 2012 இல் உள்ளபடியான ஐந்தொகையின் சுருக்கம் பின்வருமாறு.

| உரிமையும், நிதியீட்டமும் | ரூபா. '000' | சொத்துக்கள் | ரூபா. '000' |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 50,000 | ஆதனம் இயந்திரம் உபகரணம் | 17,600 |
| பொது ஒதுக்கம் | 8,000 | முதலீடுகள் | 15,000 |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | (8,600) | நன்மதிப்பு | 5,000 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 7,500 | இருப்பு | 10,900 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 5,400 | வியாபார பெறுகைகள் | 12,400 |
| | | காசும் வங்கியும் | 1,400 |
| | **62,300** | | **62,300** |

கீழ்வரும் மூலதன குறைப்பு திட்டம் இயக்குணர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

1. பங்கு மூலதனம் ரூபா. 25,000 ஆக குறைக்கப்படும்
2. எல்லா பொது ஒதுக்க மீதியும் மூலதன குறைப்பு திட்டத்திற்கு பயன்படுத்தப்படும்.
3. கம்பனியின் ஆதனம், இயந்திரம், உாகரணம் என்பன ரூபா. 2,600,000 வால் குறைக்தெழுதப்படும். மேலும் இருப்புக்கள் ரூபா. 5,900,000 ஆல் பெறுமதியிறக்கப்படும்.
4. முதலீடுகள் ரூபா. 7,500,000 ஆக குறைத்தெழுதப்படும்.
5. எல்லா பகிரப்படாத நட்டங்களையும் பதிவழிக்குக.
6. வியாபார பெறுகைகள் ரூபா. 2,500,000 வால் குறைத்தெழுதப்படுவதோடு அறவிட முடியாக் கடன் ஒதுக்கத்தினை ரூபா. 900,000 ஆகவும் மேற்கொள்க.

**வேண்டப்படுவது:**

அ. மூலதனக் குறைப்புக் கணக்கினை தயாரிக்குக.

(07 புள்ளிகள்)

ஆ. மூலதனக் குறைபின் பின்னரான திருத்திய ஐந்தொகையினை தயாரிக்குக.

(08 புள்ளிகள்)

(09 (மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** அ. விகிதப் பகுப்பாய்வு என்பதனால் நீர் கருதுவது யாது?

(02 புள்ளிகள்)

ஆ. கீழ்வருவன அல்பா நிறுவனத்தினதும் பீற்றா நிறுவனத்தினதும் நிதிக் கூற்றுக்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளாகும்.

| | அல்பா | | பீற்றா | |
|---|---|---|---|---|
| வருடம் | **2011** | **2012** | **2011** | **2012** |
| விற்பனை | 450,000 | 600,000 | 300,000 | 400,000 |
| மொத்த இலாபம் | 150,000 | 240,000 | 60,000 | 60,000 |
| தேறிய இலாபம் | 45,000 | 90,000 | 45,000 | 30,000 |
| நடைமுறை சொத்து | 500,000 | 550,000 | 275,000 | 250,000 |
| நடைமுறை பொறுப்பு | 200,000 | 225,000 | 100,000 | 125,000 |
| இருப்பு | 100,000 | 100,000 | 75,000 | 90,000 |
| (31 டிசம்பரில்) | | | | |
| உரிமை | 750,000 | 750,000 | 450,000 | 450,000 |
| நீண்ட கால கடன் | 250,000 | 275,000 | 150,000 | 100,000 |
| மொத்த சொத்துக்கள் | 1,200,000 | 1,250,000 | 700,000 | 675,000 |

இரண்டு கம்பனிகளுக்குமான 2012 ஆம் அண்டிற்க்கான கீழ்வரும் விகிதங்களை கணிக்குக.

i. மொத்த இலாப விகிதம் (Gross Profit Ratio)
ii. தேறிய இலாப விகிதம (Net Profit Ratio)
iii. நடைமுறை விகிதம் (Current Ratio)
iv. திரவ விகிதம் (Quick Ratio)
v. கடன் சொத்து விகிதம் (Debt to Asset Ratio)
vi. கடன் உரிமை விகிதம் (Debt to Equity Ratio)
vii. இரப்பு புரள்வு விகிதம் (Inventory Turnover Ratio)
viii. மொத்த சொத்து புரள்வ விகிதம் (Total Assets Turnover Ratio)

(23 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)